(**2025-26**-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2)

**SUBJECT CODE** **25 PTM 101**

**REG.NO:**

என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) :: பொள்ளாச்சி

பருவ இறுதித் தேர்வுகள் : நவம்பர் - 2025

எம். ஏ. தமிழ் இலக்கியம் மதிப்பெண்கள் : 75

முதலாம் பருவம் நேரம் : 3 மணி

# இக்கால இலக்கியம்

**பகுதி – அ** **(10x1=10** மதிப்பெண்கள்)

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (K1)

1. **கவிஞர்** சிற்பி ……………. கவிதைக்காக சாகித்திய அகாதெமி விருதினைப் பெற்றார்.

அ) ஒரு கிராமத்து நதி ஆ) நறுவிலி

இ) ஊசிகள் ஈ) ஒரு முக்கிய அறிவிப்பு

2. பாரதி பாலன் பிறந்த மாவட்டம் …………

அ) மதுரை ஆ) தேனி இ) கடலூர் ஈ) தர்மபுரி

3. 'நீர்வழிப் படுஉம்' என்ற புதினத்தின் ஆசிரியர்...................

அ) லெட்சுமி ஆ) சல்மா இ) ராஜம் கிருஷ்ணன் ஈ) தேவி பாரதி

4. நாடகத்திற்கு இலக்கணம் எழுதியவர்......................

அ) பரிதிமாற் கலைஞர் ஆ) பம்மல் சம்பந்த முதலியார்

இ) சங்கரதாஸ் சுவாமிகள் ஈ) பெ.சுந்தரம் பிள்ளை

5. கோ.லீலா எழுதிய கட்டுரை தலைப்புகளில் ஒன்று………………………

அ) துணை எழுத்து ஆ) சிறிது வெளிச்சம்

இ) வரையாட்டின் குளம்படிகள் ஈ) கேள்விக்குறி

**கீழ்க்காணும் அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.** (K2)

6. 'புரட்சிக்கவி' கவிதையில் வரும் இரு பாத்திரங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
7. 'பண்பாடு' - என்பதன் பொருள் யாது?
8. 'Novel' என்பது எந்த மொழிச் சொல்? அதன் தமிழாக்கம் என்ன?
9. பாரதிதாசன் எழுதிய இரு நாடகங்களின் பெயர்களை எழுதுக.
10. எஸ்.இராமகிருஷ்ணன் - ஆசிரியர் குறிப்பு எழுதுக.

(த.பி.பா.)

***ETHICAL PAPER***

## பகுதி – ஆ ( 5 X 5 = 25 மதிப்பெண்கள்)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. (K3)**

11. அ) 'நீயே முளைப்பாய்' - என்ற கவிதையில் உரைக்கும் செய்திகளை கவிதா ஜவஹர் வழி நின்று எடுத்துரைக்க.

(அல்லது)

ஆ) நறுவிலி மரத்தின் பயன்களாக சிற்பி உரைப்பனவற்றைத் தொகுத்து எழுதுக.

12. அ) பாரதி பாலன் எழுதிய "உயிர்ச்சுழி" என்ற சிறுகதையில் வரும் கதாப்பாத்திரங்களின் பெயர்களையும், **அக்கதையின்** மையக் கருத்தினையும் சுட்டுக.

(அல்லது)s

ஆ) பாரதி பாலன் எழுதிய "வேதவல்லி" என்ற சிறுகதையில் வரும் கதாப்பாத்திரங்களின் பெயர்களையும், **அக்கதையின்** மையக் கருத்தினையும் சுட்டுக.

13. அ) நீர்வழிப் படுஉம் - என்ற புதினத்தின் வழி ஈரோடு சாயப்பட்டறையில் நடக்கும் நிகழ்வுகளை எடுத்துரைக்க.

(அல்லது)

ஆ) தேவிபாரதி, கா.சு.வேலாயுதன் - ஆசிரியர் குறிப்பு எழுதுக.

14. அ) ஆட்டனத்தி என்பவர் யார்? அவரது தனிப்பட்ட சிறப்பினை எடுத்துரைக்க.

(அல்லது)

ஆ) நெய்தலி என்பவள் யார்? சேர தாண்டவ நாடகத்தில் அவளின் பங்கு யாது?

15. அ) எஸ்.இராமகிருஷ்ணன் எழுதிய "சிறிது வெளிச்சம்" என்ற கட்டுரைப் பகுதி வெளிப்படுத்தும் செய்திகளை எழுதுக.

(அல்லது)

ஆ) கரையான்களின் வாழ்வியல் குறித்த பதிவுகளைக் கோ.லீலா வழி நின்று எடுத்துரைக்க.

## பகுதி – இ ( 5 X 8 = 40 மதிப்பெண்கள் )

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.**

**(K4 (Or) K5)**

16. அ) பாரதியார் இயற்றிய நாட்டுக்கல்வி என்ற கவிதையில் இடம்பெறும் கருத்துக்களை விவரித்து எழுதுக.

(அல்லது)

ஆ) பாரதிதாசன் வடித்த புரட்சிக்கவி என்ற கவிதை நாடகத்தினைச் சுருக்கி வரைக.

17. அ) பாரதி பாலன் எழுதிய "வேடிக்கை மனிதர்கள்" சிறுகதையினை சுருக்கி வரைக.

(அல்லது)

ஆ) பாரதி பாலன் எழுதிய "நான் நீ" சிறுகதையினைச் சுருக்கி வரைக.

18. அ) தேவி பாரதி எழுதிய நீர்வழிப் படுஉம் என்ற புதினத்தில் காரு மாமாவின் பங்களிப்பை விரிவாக எடுத்துரைக்க.

(அல்லது)

ஆ) 'பொழுது போக்கு மின்னல்கள்' என்ற நாவலின் மூலம் கா.சு.வேலாயுதன் பெண் சமுதாயத்திற்கு உணர்த்தும் செய்திகளை விளக்கி எழுதுக.

19. அ) பரிதிமாற் கலைஞர் எந் நாடகத்தில் பெண் வேடங்களை புனைகிறார்? 'ரூபாவதி' வழி நின்று விவரிக்க.

(அல்லது)

ஆ) நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி கட்டுரை வரைக

20. அ) இரட்டை வால் குருவி குறித்து கோ.லீலா கூறும் தகவல்களைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

ஆ) வரையாட்டின் குளம்படிகள் என்று கோ.லீலா ஏன் பெயர் சூட்டினார்? இக்கட்டுரைத் தலைப்பின் வாயிலாகவே நிறுவுக.

*ETHICAL PAPER*

***********************